தினமணி

**சிறுபான்மையினருக்கு இலவச திறன் வளர்ப்புப் பயிற்சி**

First Published : 28 Nov 2011 12:39:48 PM IST

தேனி, நவ. 27: தேனி மாவட்டத்தில் வேலை வாய்ப்பு இல்லாத சிறுபான்மையினருக்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சார்பில் இலவசத் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் நடைபெற உள்ளன.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரசு நிதி உதவியுடன் சென்னையில் உள்ள நிறுவனங்கள் மூலம் 30 நாள்கள் முதல் ஒரு ஆண்டு காலம் வரை திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் சேருவதற்கான நேர்காணல், சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் வரும் டிசம்பர் 1 மற்றும் 2ம் தேதிகளில் நடைபெற உள்ளது. தகுதியுள்ளவர்கள் தங்களது பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள், ஜாதி மற்றும் வருமானச் சான்றிதழ், 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல், பள்ளி மாற்றுச் சான்றிதழ், இளங்கலை அல்லது முதுகலை பட்டப்படிப்புச் சான்றிதழ்கள் மற்றும் கல்லூரி மாற்றுச் சான்றிதழ் ஆகியவற்றுடன் நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.

நேர்காணல் நடைபெறும் இடங்கள் குறித்து மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திருந்திய நெல் சாகுபடி பயிற்சி**

First Published : 29 Nov 2011 03:12:30 PM IST

மதுராந்தகம்,நவ.28: சித்தாமூர் ஒன்றியம்,சிறுநகர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமில் உயரிய உளுந்து சாகுபடி,மணிலா சாகுபடி,சொட்டு நீர் பாசனம் முறையில் வாழை சாகுபடி,காய்கறி சாகுபடி குறித்து கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நீர்வளம், நிலவளம் திட்டத்தின் தலைவர் பி.ஜே. பாண்டியன் எடுத்துரைத்தார்.

திட்ட விஞ்ஞானி சீனி.அன்புமணி,திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்களான பாய் நாற்றாங்கால்,சதுர நடவு,களை எடுக்கும் கருவி மூலம் களை எடுத்தல்,பச்சை வண்ண அட்டை பயன்படுத்துதல் குறித்து விளக்கம் மற்றும் களப்பயிற்சி அளித்தார்.

இம்முகாமில் வேளாண்மை சார்ந்த பிற துறைகளான தோட்டக்கலை,விற்பனை,பொறியியல் துறை உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

காஞ்சிபுரம்

மதுராந்தகத்தில் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் விழா: தொழிலாளர் நலத்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, விவசாயத் துறை அமைச்சர் தாமோதரன், கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் ராஜூ, கால்நடைத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா உள்ளிட்டோர் பங்கேற்பு, கூட்டுறவு சர்க்கரை ஆலை வளாகம், பகல் 12.


தினமலர்

உண்மையின் உரைகல்


**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2011,00:00 IST



ஸ்பைருலினா பாசி வளர்ப்பு வேகமாக பரவி வரக் காரணம் அதில் உள்ள சத்துக்கள் தான். வைட்டமின் பி12 என்ற சத்து இதில் உள்ளது.ரத்தசோகையை நீக்கும். மாத்திரை உள்ளிட்ட பல வடிவங்களில் இப்பாசி விற்பனை செய்யப்படுகிறது.

இந்த பாசியைத் தூள் செய்து எலுமிச்சை பழச்சாறுடன் கலந்து குளிர்பானம் போலவும் குடிக்கலாம். இந்த பாசியைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் நோய் எதிர்ப்புத்திறன் கூடும். மனிதர்களுக்கு மட்டுமல்ல, கால்நடைகளுக்கும் சிறந்த உணவாக இந்தப்பாசி பயன்படுகிறது. மாட்டுத்தீவனம் தயாரிக்கும்போது இந்தபாசியைக் கலந்து தயாரித்தால் மாடுகள் ஆரோக்கியமாக இருக்கும்.

விரைவில் பருவத்துக்கு வரும். பால் கொடுக்கும் திறனும் அதிகரிக்கும். மீன்களுக்கு கொடுக்கப்படும் தீவனத்தில் ஸ்பைருலினா பாசியைக் கலந்தால் அதன் வளர்ச்சி வேகமாக இருக்கும். அலங்கார மீன்களுக்கு கொடுத்தால் அவை பளபளவென இருக்கும். 60 முதல் 65 சதம் புரதச்சத்து உள்ள பாசி. கிலோ ஒன்றுக்கு ரூ.700 முதல் ரூ.800 வரை விலைபோகும்.

சமீபகாலம் வரை கால்நடைத் தீவனம் தயாரிப்பவர்கள் சீனாவில் இருந்துதான் இந்த பாசியை இறக்குமதி செய்துவந்தார்கள். தற்சமயம் அதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்திய உற்பத்திக்கு மதிப்பு கூடி இருக்கிறது. ஸ்பைருலினா பாசி விற்பனை குறித்து மேலும் **தகவல்பெற தொடர்பு முகவரி**:
டாக்டர் கி.ராவணேஸ்வரன், உதவி பேராசிரியர் மற்றும் "பேராசிரியர் மற்றும் தலைவர், மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மாதவரம் பால்பண்ணை காலனி, சென்னை-5. **தொலைபேசி**: 044-2555 6750'.

அதிக விளைச்சலுக்கு புதிய பயிர் ஊக்கிகள்: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் குறைந்த செலவில் அதிக பலன் அளிக்கும் விதத்தில் "தென்னை டானிக்' என்ற தொழில்நுட்பத்தை 2003ம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. கடந்த 8 ஆண்டுகளாக உழவர்கள் பயனடைந்து வருகிறார்கள். மேலும் பயிர் வினையியல் துறையினரால் கடந்த 2009-2010, 2010-2011ஆம் ஆண்டுகளில் 5

பயிர் மேலாண்மைத்தொழில் நுட்பங்கள் வெளியிடப் பட்டது. இதில் முறையே பயறுவகைப் பயிர்களான பாசிப்பயறு, உளுந்து, துவரைக்கு "த.வே.ப.க. பயறு ஒண்டர்', நிலக்கடலைக்கு "த.வே.ப.க. நிலக்கடலை ரிச்'; பருத்திக்கு "த.வே.ப.க.பருத்தி பிளஸ்'; கரும்பிற்கு த.வே.ப.க. கரும்பு பூஸ்டர்', மக்காச் சோளத்திற்கு "த.வே.ப.க. மக்காச்சோள மேக்சிம்' ஆகிய பயிர் பூஸ்டர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்தகைய தொழில் நுட்பங்கள் அனைத்தும் குறிப்பிடப்பட்ட பயிர்களில் பல்வேறு பருவங்களில் உருவாகும் அல்லது உருவாக்கப்படும் வினையியல் குறைபாடுகளை கண்டறிந்து அவைகளின் பங்களிப்பினால் ஏற்படும் விளைச்சல் இழப்பை ஈடுகட்டி நிலைநிறுத்துவதற்காக கண்டறியப்பட்டதாகும்.

விவசாயிகள் பல்வேறு பயிர் ஊக்கிகளைப் பயிர் வினையியல் துறை மூலமாகவோ அல்லது மாவட்டம்தோறும் உள்ள வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலமாகவோ பெற்று பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறலாம் என தமிழ்நாடு வே.ப.கழக துணைவேந்தர் ப.முருகேசபூபதி கேட்டுக் கொள்கிறார்.

**அமிர்த்த கரைசல்**: *தயாரிப்பு முறை*: மாடு ஒருமுறை போட்ட சாணம், (எந்த மாடாக இருந்தாலும் பயன்படுத்தலாம்) ஒருமுறை பெய்த மூத்திரம்?இவற்றை ஒரு பிளாஸ்டிக் வாளியில் எடுத்துக் கொண்டுஅதில் ஒருகைப்பிடிவெல்லம், ஒருகுடம் தண்ணீர் ஆகியவற்றை சேர்க்க வேண்டும்.

24 மணி நேரம் நிழற்பாங்கான இடத்தில் வைக்க வேண்டும். அமிர்த கரைசல் தயார். ஒரு பங்கு கரைசலுடன் 10 பங்கு தண்ணீர் சேர்த்து பயிர்களுக்கு தெளிக்கலாம். ஒரு ஏக்கருக்கு பத்து தெளிப்பான் (டேங்க்) அளவுக்கு தெளிக்கலாம். வாய்க்கால் நீரிலும் கலந்துவிடலாம்.

அமிர்தகரைசலை நிலத்தில் தெளித்த 24 மணி நேரத்தில் நுண்ணுயிர்கள் பெருகும். பயிர்கள் நோய்நொடி இல்லாமல் வளர உதவும். பொதுவாக 15 நாட்களுக்கு ஒருமுறை இந்த கரைசலைத் தெளிக்கலாம். பயிர்கள் மிகவும் வளமாகக் காணப்பட்டால் வாரம் ஒருமுறை கூடத் தெளிக்கலாம். வசதி இருந்தால் தண்ணீர் பாய்ச்சும்போதெல்லாம் அதனுடன் கலந்துவிடலாம். (**தகவல்**: இயற்கை வேளாண்மை, அ முதல் ஃ வரை, பொன்.செந்தில்குமார்)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**மதிப்பூட்டிய சோயா பால்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2011,00:00 IST




பச்சை சோயா பீன்ஸ் உள்ள சிவப்பு விதையிலிருந்து சோயா பால் எளிதில் தயாரிக்கலாம். சோயா பால் தயாரிப்பதன் மூலம் நிறைய வருமானமும் அந்த பாலின் விதையின் கழிவிலிருந்து உணவுக்கு தேவையான பொருட்கள் தயாரிக்கலாம். அதிலிருந்து டிரை சோயாபீன்ஸ் தயாரித்து நாமே சொந்தமாக கடைக்கு சந்தைப்படுத்தினால் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யலாம். சோயா பாலை எந்தவிதமான கெமிக்கல் இல்லாமல் இயற்கையில் எளிய முறையில் மதிப்புகூட்டும் முயற்சியால் மூன்று மாதம் கெடாமல் வைத்திருந்து இந்த சோயா பாலிலிருந்து பாதாம்பால் தயாரித்து விற்பனை செய்தால், லாபம் அடையலாம்.

சோயா பாலில் சர்க்கரை, எசன்ஸ், சிறிது சமையலுக்கு பயன்படும் உப்பு சேர்த்து சுவையான பாதாம்பால் தயாரிக்கலாம். சோயா பீன்சிலிருந்து மூன்று விதமாக சோயாபால் எடுக்கலாம்.

* சிவப்பு சோயா பால் விதையில் தோல் உரிக்காமல் அப்படியே பால் எடுக்லகாம். ஆனால் அதன் நிறம் இளம் ஊதா நிறத்தில் இருக்கும்.

* சோயா விதையில் அதன் தோலை நீக்கி அதன் வெள்ளைநிற சோயா விதையிலிருந்து பால் எடுத்தோமானால் சோயா பால் வெள்ளையாக இருக்கும்.

* மளிகை கடைகளில் விற்கும் சோயா பீன்ஸ் டிரை சோயா பீன்ஸ் ஆகும்.

வாங்கி வந்த சோயா பருப்பை நன்றாக கழுவி 8 மணி நேரம் ஊறவைத்து மறுபடியும் சோயா பருப்பை கழுவி சுத்தம் செய்து அதிலிருந்து சோயா பால் தயாரிக்கலாம். இதன் சுவை மணமும், நிறமும் சற்று மாறுதலாக இருக்கும். தரம் குறைவாக இருக்கும். சோயா பால் தயாரிப்பதற்கு

இயந்திரம் உள்ளது. இந்த இயந்திரத்தின் பெயர் சோயா டைரக்ட் என்பதாகும். இதன்மூலம் குறைவான பாலை உற்பத்தி செய்ய முடியும். ஆட்டோமெடிக் இயந்திரம் உள்ளது. ஒவ்வொரு பிராண்டைப்பொறுத்து அதன் கொள்ளளவு பொறுத்து விலை 3 லட்சம் முதல் கிடைக்கும்.

மாட்டு பாலுக்கு மாற்றாக பயன்படுத்தி சோயா பாலிலிருந்து பத்து வகையான உணவு தயாரிக்கலாம். 1. பாதாம்பால், 2. பிஸ்தா மில்க், 3. ஏலக்காய் மில்க், 4. ரோஸ் மில்க், 5. ஸ்ட்ராபெரி மில்க், 6. பைன் ஆப்பிள் மில்க், 7. வெண்ணிலா மில்க், 8. ஜிகர்தண்டா மில்க், 9. சாக்லேட் மில்க், 10. காபி மில்க் ஆகியவை. சோயா பாலிலிருந்து எளிய முறையில் வீட்டிலிருந்தபடியே சிறு தொழிலாக அமைத்து பெரிய தொழிலாக மாற்றி அதிக லாபம் அடையலாம்.

இந்த சோயா பீன்ஸ் விதையிலிருந்து பால் எடுத்தபிறகு அதன் கழிவு சத்தான உணவு ஆகும். இதற்கு ஒகாரா என்று பெயர். இதில் அதிகமாக நார்சத்து உள்ளது. இந்த ஒகாரா மாற்று உணவுப் பொருட்களுடன் பிஸ்கட், கோதுமை மாவு, மற்ற தானிய உணவுடன் சேர்த்துக் கொண்டால் உடல்நலத்திற்கு ஆரோக்கியமாக இருக்கும்.

இந்த சோயா பால் தரமான மாட்டு பாலில் உள்ள சத்துக்களைவிட அதிக சத்துக்கள் கொண்டது. இந்த சோயா பாலில் எனர்ஜி, புரோட்டின், கொழுப்பு, கார்போ ஹைட்ரேட், கால்சியம்,நார்ச்சத்து, இரும்புச்சத்து, சோடியம் உள்ளது. இதைப்போல் 30க்கும் மேற்பட்ட வைட்டமின்கள் உள்ளன.

இந்த சோயாபால் தினமும் அருந்தினால் கொலஸ்டிரால் அளவு குறைந்துவிடும். இதயம் மற்றும் சிறுநீரகம் நல்ல ஆரோக்கியமாக செயல்படும். உடலில் கேன்சர் செல் வராமல் தடுக்கும். மூளையின் ஞாபகசக்தி அதிகரிக்கும். மெல்லிய தேகம் உள்ளவர்கள் சோயா பால் அருந்தினால் உடல் வலுப்பெறும். உடலில் சர்க்கரை அளவு கட்டுப்பட்டு குறைந்து விடும்.

உடலில் சீக்கிரம் செரிமானமாகும். நார்ச்சத்து அதிகம் உள்ளதால் குடலுக்கு ஏற்ற உணவாகும். சோயா பாலிலிருந்து பாதாம்பால் தயாரிக்க சிறிய பாதாம்பால் பாட்டில் தேவைப்படும். இந்த பாதாம்பால் பாட்டிலில் பத்து வகையான நறுமண பால் வீட்டிலிருந்தபடியே சிறு தொழிலாக குறைந்த முதலீட்டில் ஒரு பாதாம்பால் தயாரிப்பு செலவு ரூ.5.00. அடக்கவிலை நமக்கு ஏற்படும். அதன் பாட்டிலின்மேல் லேபிள்கம்பெனி பெயர், எக்ஸ்பைரி டேட், எம்ஆர்பி: 15.00 என்று அச்சிட்டு கடைக்கு பாட்டில் ரூ.10.00க்கு விற்பனை செய்ய வேண்டும்.

குறைந்தது ஒரு நாளுக்கு 100 பாட்டில் விற்பனை செய்தோமானால் நமக்கு மாதத்திற்கு செலவு போக ரூ.15,000 லாபம் கிடைக்கும். வீட்டில் உள்ள இரண்டு நபர்கள் தேவைப்படும். நம் வீட்டில்

உள்ள அறையே போதுமானதாகும். மாட்டுப்பால், சோயாபால் இந்த இரண்டு வகையான பாலில் நாம் எந்தவிதமான கெமிக்கல் கலந்தாலும் இரண்டு பாலும் கெட்டுவிடும். அதாவது பென்சாயிக் ஆசிட் மற்றும் பிரிசர்வேட்டிவ் கிளாஸ்-2 கெமிக்கல் கலக்கக்கூடாது.

பாதாம்பால் ஏஜன்சி எடுத்து செய்பவர்கள், ரஸ்னா மோர் தயாரித்து விற்பனை செய்பவர்கள், சோடா கலர் கம்பெனி நடத்துபவர்கள் மற்றும் சாக்லேட், பிஸ்கட், தண்ணீர் பாக்கெட் விற்பனை செய்பவர்கள் அனைத்து ஏஜென்சி எடுப்பவர்கள் வீட்டிலிருந்தபடியே சோயாபால் தயாரித்து எளிய முறையில் அதிகமாக சம்பாதிக்கலாம்.

இதனை கையில் எளிய முறையில் தயாரித்தாலும் இயந்திரத்தின் உதவியுடன் தயாரித்தாலும் மிகவும் முக்கியம் ஒவ்வொரு கடைக்கும் சந்தைப் படுத்துவதன் மூலம் இயற்கை அங்காடி, இன்ஜினியரிங் காலேஜ் கேன்டீன், சூப்பர் மார்க்கெட், பள்ளி கேன்டீன் இவற்றின்மூலம் வியாபாரத்தை அதிகப்படுத்தி லாபம் கூடுதலாக சம்பாதித்து வாழ்க்கைத்தரத்தை சொந்த தொழில் மூலம் உயர்த்திக் கொள்ளலாம்.-சந்திரமோகன்,மொபைல்: 94892 56025.

**சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி**

நவம்பர் 29,2011,12:17



புதுடில்லி : அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கோட்டா முறையில் 18 ஆயிரம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு விரைவில் அனுமதி அளிக்க உள்ளதாக மத்திய உணவுத்துறை அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக, தலைநகர் டில்லியில் பத்திரிகையாளர்களை சந்தித்த அமைச்சர் தாமஸ் கூறியதாவது, முன்னுரிமை கோட்டா அடிப்படையில், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு 10 ஆயிரம் டன் சர்க்கரையும், அமெரிக்காவிற்கு 8 ஆயிரம் டன் சர்க்கரையும் ஏற்றுமதி செய்யப்பட உள்ளது. 2010-11ம்

நிதியாண்டில், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு 10 ஆயிரம் டன்னும், அமெரிக்காவிற்கு 8,200 டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த மாதம், மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் நடைபெற்ற அதிகாரம் பெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில், ஓபன் ஜெனரல் லைசென்ஸ் முறையின் மூலம், 1 மில்லியன் டன் சர்க்கரையை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டது என அவர் கூறினார். இந்தியா, சர்வதேச அளவில், இரண்டாவது பெரிய சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாகவும் மற்றும் சர்க்கரையை பயன்படுத்தும் நாடுகளில் முனன்ணி இடத்தையும் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**வளம் சார்ந்த கடன் திட்டத்தில் விவசாயத்துக்கு முன்னுரிமை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2011,00:38 IST

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையை நபார்டு வங்கி வெளியிட்டுள்ளது. கலெக்டர் லில்லி கடன் திட்ட அறிக்கையை வெளியிட, ரிசர்வ் வங்கி மேலாளர் விஜயகுமார், இந்தியன் உதவி பொது மோலாளர் கார்த்திகேயன் ஆகியோர் பெற்று கொண்டனர். தர்மபுரி மாவட்ட வளம் சார்ந்த கடன் திட்டத்துக்கு விவசாயம் மற்றும் சிறு தொழில் வளர்ச்சிக்காக, 1,450 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு 988 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், பயிர் கடனுக்கு 687 கோடி விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு, 301 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் சிறு தொழில் வளர்ச்சிக்காக, 112 கோடியும், மற்ற வளர்ச்சிக்கு முன்னுரிமை தொழில் திட்டங்களுக்கு, 350 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து வங்கிகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நபார்டு வங்கி உதவி பொது மோலாளர் கணேசன் தெரிவித்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் ரவிச்சந்திரன், மகளிர் திட்ட அலுவலர் சத்தியபாலன், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் கணேசன், மற்றும் மார்க்ரெட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கனமழை; விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2011,04:51 IST

அவிநாசி:அவிநாசியில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது; தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.அவிநாசி வட்டாரத்தில், அவிநாசி, கருவலூர், தெக்கலூர் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு துவங்கிய கனமழை

இரவு 9.30 மணி வரை பெய்தது. இம்மழை 132 மில்லி மீட்டராக பதிவானது. கனமழை காரணமாக, சேவூர் ரோடு, என்.எச்., ரோடு - சேவூர் ரோடு சந்திப்பு ஆகிய பகுதிகளில் மழை நீர் இரண்டு அடி உயரத்துக்கு தேங்கியது.இதனால், அவ்வழியே போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மழை நின்றதும், தண்ணீர் வடிந்த பின்னரே, போக்குவரத்து சீரானது. நீண்ட நாளுக்கு பின், கனமழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். "ஏற்கனவே, பயிரிடப்பட்டுள்ள மஞ்சள், வாழை, கரும்பு ஆகியவற்றுக்கு இம்மழை உதவியாக இருக்கும்,' என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.குளத்துக்கு தண்ணீர் வரத்தில்லை: அவிநாசி வட்டாரத்தில் கடந்த ஒரு மாதமாக பலமுறை நல்ல மழை பெய்தும், அவிநாசியிலுள்ள தாமரைக்குளம், சங்கமாங்குளங்களுக்கு தண்ணீர் வரவேயில்லை.

மேற்கண்ட குளங்களுக்கு தண்ணீர் வரும் பாதை முழுவதும் தூர்வாராமல் அடைத்து கிடக்கிறது; பல இடங்களில் ஆக்கிரமிப்பு உள்ளது. இதன் காரணமாக, எப்போது மழை பெய்தாலும், குளத்துக்கு தண்ணீர் வருவதில்லை. பொதுப்பணித்துறையினர் ஆக்கிரமிப்பை கண்டறிந்து அகற்றினால், அடுத்த மழைக்காவது தண்ணீர் கண்டிப்பாக வரும். என்.எச்., ரோட்டில் நெரிசல்: நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழை காரணமாக என்.எச்., ரோட்டில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அவிநாசி அருகே பவர் ஹவுஸ் முதல் தெக்கலூர் வரை இருபுறமும் வாகனங்கள் அணிவகுத்து நின்றன. ஆறு வழிச்சாலை பணிகள் நடப்பதால், பல இடங்களில் மழை நீர் தேங்கியதாலும், வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முயன்றதாலும், போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. அவிநாசி போலீசார் சென்று போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர்.சாக்கடையில் விழுந்து பலி: அவிநாசி அருகே அவிநாசிலிங்கம்பாளையம் ரோட்டில், சாக்கடையில் நேற்று காலை ஆண் பிணம் கண்டறியப்பட்டது. விசாரணையில், ஈட்டிவீரம்பாளையத்தை சேர்ந்த ரங்கன் (55) என்பது தெரிந்தது. தேவம்பாளையத்திலுள்ள தனது மகனை பார்க்க நேற்று முன்தினம் இரவு வந்த போது, குடிபோதையில் சாக்கடையில் விழுந்து இறந்ததாக போலீசார் தெரிவித்தனர். அவிநாசி போலீசார் விசாரிக்கின்றனர்.

**விவசாயிகளுக்கு எண்ணெய் வித்து பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2011,04:38 IST

கருத்தை பதிவு செய்ய

மடத்துக்குளம்:மடத்துக்குளம் வேளாண்மைத்துறையினர் சார்பாக விவசாயிகளுக்கு ஐசோபாம் எண்ணைய் வித்து பயிற்சி வழங்கப்பட்டது.மடத்துக்குளம் ஜோத்தம்பட்டி சவுடேஸ்வரி திருமண

மண்டத்தில் நடந்த பயிற்சிக்கு ஊராட்சி தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். வாகரை மக்காசோள ஆராய்ச்சி நிலையத்திலிருந்து உதவி பேராசிரியர் பாரதி, எண்ணைய் வித்துக்கள் குறித்தும், அவற்றின் பயன்பாடுகள், விவசாயிகளுக்கு கிடைக்கும் லாப விகிதங்கள்,மற்றும் விவசாய முறைகள் குறித்து விளக்கினார்.மடத்துக்குளம் வேளாண்மை அலுவலர் கவிதா, துணை வேளாண்மை அலுவலர் பெள்ளன், விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2011,00:49 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: கடவூர் பஞ்சாயத்து யூனியன் இடையப்பட்டியில் ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு முகாம் நடந்தது. முகாமில் அறுவடைக்கு பின் நேர்த்தி செய்வதில் உள்ள தொழில்நுட்பம், மதிப்பு கூட்டலின் முக்கியத்துவம், விளைபொருள் வணிகமுறை தரம் பிரிப்பதின் அவசியம், சந்தை நிலவரத்துக்கு ஏற்ப பயிர் சாகுபடி முறைகள், புதிய நெல் ரகங்கள் மற்றும் விவசாயிகளுக்கு சுழல்நிதி குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமில் வேளாண்மை அலுவலர் அர்ச்சுனன், உதவி அலுவலர்கள் சதீஷ்குமார், கூடு டிரஸ்ட் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுப்ரமணி உள்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**நெல் சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2011,00:59 IST

கருத்தை பதிவு செய்ய

உடையார்பாளையம்: உடையார்பாளையம் அருகே உள்ள சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையம் மற்றும் வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு நெல் சாகுபடியில் தொழில் நுட்ப பயி ற்சி அளிக்கப்பட்டது. வேளாண் உதவி செயற்பொறியாளர் அண்ணாதுரை வரவேற்றார். மாவட்ட செயற்பொறியாளர் மணி பேசினார். கிரீடு வேளாண் அறிவியல் மைய தொ ழில்நுட்ப வல்லுநர் ராஜா ஜோஸ்லின் மற்றும் மைய தொ ழில்நுட்ப வல்லுநர்கள் பலர் பங்கேற்றனர். நெல் சாகுபடியில் உள்ள தொழில்நுட்பம் மற்றும் வேளாண் கருவிகளை இயக்கும் முறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தா.பழூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**உரக்கடைகளில் ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,22:01 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல் : வத்தலக்குண்டு, சித்தையன்கோட்டை பகுதிகளில் உள்ள உரக்கடைகளில் கலெக்டர் நாகராஜன் ஆய்வு செய்தார். உரக்கடைகளின் உரிமம், உரம் இருப்பு, விற்கும் விலை, பூச்சி மருந்துகள் விபரங்கள் ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பிட்ட விலைக்கு மேல் உரம் விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டது. என்டோசல்பான் பூச்சிகொல்லி மருந்து விற்க தடை செய்யப்பட்டுள்ளதால் அதை விற்பனை செய்யக்கூடாது என்றும் எச்சரிக்கப்பட்டது. ஆய்வின் போது, வேளாண்மைத்துறை இணைஇயக்குனர் கணேசன், நேர்முக உதவியாளர் மனோகரன், ஆர்.டி.ஓ., பெருமாள் ஆகியோர் உடனிருந்தனர்

**வாழையில் கிழங்கு அழுகல்: கட்டுப்படுத்த ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,23:39 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி : வாழையில் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.தேனி தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் கூறியதாவது: வாழை சாகுபடியில் கன்று நடவில் இருந்து ஐந்து மாதங்கள் வரை கிழங்கு அழுகல் நோய் அதிகம் காணப்படும். , நோய் தாக்கப்பட்ட கன்றின் இலைகள் மஞ்சளாகவும், இளம் குருத்து மிகவும் சிறுத்தும், இலைகள் வெளிவர முடியாமல் தண்டின் உள்ளேயே இருப்பது போல் காணப்படும்.ஆரம்பத்தில் குருத்து இலைகள் காய்ந்தும் மற்ற இலைகள் பச்சையாகவும் இருக்கும். நாளடைவில் பச்சை இலைகளும் காய்ந்து விடும். அடித்தண்டு உப்பி பெருத்தும், தரைமட்டத்தில் தண்டில் கருப்பு நிற வளையமும், வெடிப்பும் காணப்படும்.சில சமயம் தரைமட்டத்தில் அடித்தண்டில் தண்டுப்பகுதி அழுகி காணப்படுவதால் தண்டை பிடித்து லேசாக இழுத்தால் தண்டு கிழங்கில் இருந்து தனியே வந்து விடும்.பரவும் வீதம்: வடிகால் வசதி இல்லாமல் இரண்டு நாட்களுக்கு மேல் தண்ணீர் தேங்கி நிற்பது, கோடை காலத்தில் மண் வெப்பம் அதிகரிக்கும் போது, எர்வீனியா என்ற இந்த கிழங்கு அழுகல்நோய் ஏற்படுகிறது.கட்டுப்படுத்தும் முறைகள்: மழைகாலத்தில் நிலத்திற்கு நல்ல வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். வெயில் காலங்களில் ஊடுபயிராக சணப்பை பயிரிட்டு, 45 நாட்கள் கழித்து பிடுங்கி, மண்ணில் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.நடவு நட்ட 3ம் நாள் எமிசான் ஒரு கிராம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து

கன்றினை சுற்றி ஊற்ற வேண்டும். ஒரு லிட்டருக்கு கார்பன்டசிம் ஒரு கிராம், ஸ்டெப்ரோமைசீன் 0.20 கிராம் கலந்து ஒவ்வொரு கன்றிற்கும் 250 மி.லி., வீதம் கன்றினை சுற்றி ஊற்ற வேண்டும்.புரோப்பிகோனசோல் மருந்து: 0.5 மி.லி., ஸ்டெப்ரோமைசீன் சல்பேட் 0.20 கிராம், ஒரு லிட்டரில் கலந்து ஒவ்வொரு கன்றிற்கும் 250 மி.லி., வீதம் ஊற்ற வேண்டும். முதல் மருந்திற்கு பின்னர், 20வது நாள், 40வது நாளில் இதேபோல் வேர்பாகத்தை நனைப்பதன் மூலம் எர்வீனியா என்ற கிழங்கு அழுகல் நோயில் இருந்து வாழையை பாதுகாக்கலாம். இவ்வாறு கூறினார்.

தினத் தந்தி

## *உணவுப் பொருள்கள் மீதான முன்பேர வர்த்தகத்திற்கு தடை வர வாய்ப்பில்லை*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*அண்மைக் காலமாக சில முக்கிய உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து வருகிறது. ஆனால் இதற்கும் தற்போது முன்பேர வர்த்தகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள வேளாண் விளைபொருள்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதால் தற்போது அந்தப் பொருள்களுக்கு தடை விதிக்கப்பட வாய்ப்பில்லை என தெரிகிறது.*
*அனுமதி*
*நம் நாட்டில், கடந்த 2003–ஆம் ஆண்டில் முன்பேர வர்த்தகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. குறுகிய காலத்தில் இந்திய முன்பேர சந்தைகள் உலகின் முன்னணி முன்பேர வர்த்தக சந்தைகளுள் ஒன்றாக உருவெடுத்துள்ளன. முன்பேர வர்த்தக சந்தைகள் எஃப்.எம்.சி. என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஃபார்வர்டு மார்க்கெட்ஸ் கமிஷனின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.*
*தற்போது முன்பேர சந்தைகளில் 24 வகையான உணவுப் பொருள்கள் மீது வர்த்தகம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் கோதுமை, பார்லி, சர்க்கரை, உருளைக்கிழங்கு, கச்சா பாமாயில் போன்ற பல பொருள்கள் அடங்கும். அண்மைக் காலத்தில் இவற்றில் எந்தப் பொருளின் விலையும் அதிகரிக்கவில்லை. ஆனால் காய்கறி, இறைச்சி, பால், மீன் மற்றும் பழங்கள் விலை உயர்ந்துள்ளது. அதே சமயம் இதில் எந்தப் பொருளுமே முன்பேர வர்த்தகத்தில் அனுமதிக்கப்படவில்லை.*
*கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், முக்கிய உணவு தானியங்களை கையிருப்பு வைப்பதற்கான தற்போதைய விதிமுறைகளுடன், நீண்ட கையிருப்பாக 30 லட்சம் டன் கோதுமை மற்றும் 20 லட்சம் டன் அரிசி கையிருப்பு வைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. பொது கையிருப்பு மற்றும் நீண்ட கால கையிருப்பாக 3.20 கோடி டன் உணவு தானியங்களை தற்போது வைத்திருந்தால் போதுமானது. எனினும் இந்திய உணவுக் கழகத்தின் கைவசம் மொத்தம் 6.10 கோடி டன் தானிய கையிருப்பு உள்ளது. இதில் 3.56 கோடி டன் கோதுமையும், 2.49 கோடி*

டன் அரிசியும் அடங்கும்.

பருப்பு வகைகள்

மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி.தாமஸ் மாநிலங்களவையில் அண்மையில் இந்த புள்ளிவிவரங்களை சமர்ப்பித்தார். "அரிசி, கோதுமைக்கு உள்ளது போன்று, பருப்பு வகைகளை நீண்ட கால கையிருப்பு வைக்கும் எண்ணம் இல்லை. பருப்பு உற்பத்தியைப் பொறுத்தவரை நாடு கடும் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருவதே இதற்கு காரணம். உண்மையில் பருப்பு தேவைக்கும், சப்ளைக்கும் இடையிலான இடைவெளி இறக்குமதியைக் கொண்டு நிவர்த்தி செய்யப்படுகிறது" என அவர் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

## உணவுப் பொருள்கள் மீதான முன்பேர வர்த்தகத்திற்கு தடை வர வாய்ப்பில்லை



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

அண்மைக் காலமாக சில முக்கிய உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து வருகிறது. ஆனால் இதற்கும் தற்போது முன்பேர வர்த்தகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள வேளாண் விளைபொருள்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதால் தற்போது அந்தப் பொருள்களுக்கு தடை விதிக்கப்பட வாய்ப்பில்லை என தெரிகிறது.

அனுமதி

நம் நாட்டில், கடந்த 2003–ஆம் ஆண்டில் முன்பேர வர்த்தகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. குறுகிய காலத்தில் இந்திய முன்பேர சந்தைகள் உலகின் முன்னணி முன்பேர வர்த்தக சந்தைகளுள் ஒன்றாக உருவெடுத்துள்ளன. முன்பேர வர்த்தக சந்தைகள் எஃப்.எம்.சி. என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஃபார்வர்டு மார்க்கெட்ஸ் கமிஷனின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

தற்போது முன்பேர சந்தைகளில் 24 வகையான உணவுப் பொருள்கள் மீது வர்த்தகம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் கோதுமை, பார்லி, சர்க்கரை, உருளைக்கிழங்கு, கச்சா பாமாயில் போன்ற பல பொருள்கள் அடங்கும். அண்மைக் காலத்தில் இவற்றில் எந்தப் பொருளின் விலையும் அதிகரிக்கவில்லை. ஆனால் காய்கறி, இறைச்சி, பால், மீன் மற்றும் பழங்கள் விலை உயர்ந்துள்ளது. அதே சமயம் இதில் எந்தப் பொருளுமே முன்பேர வர்த்தகத்தில் அனுமதிக்கப்படவில்லை.

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், முக்கிய உணவு தானியங்களை கையிருப்பு வைப்பதற்கான

தற்போதைய விதிமுறைகளுடன், நீண்ட கையிருப்பாக 30 லட்சம் டன் கோதுமை மற்றும் 20 லட்சம் டன் அரிசி கையிருப்பு வைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. பொது கையிருப்பு மற்றும் நீண்ட கால கையிருப்பாக 3.20 கோடி டன் உணவு தானியங்களை தற்போது வைத்திருந்தால் போதுமானது. எனினும் இந்திய உணவுக் கழகத்தின் கைவசம் மொத்தம் 6.10 கோடி டன் தானிய கையிருப்பு உள்ளது. இதில் 3.56 கோடி டன் கோதுமையும், 2.49 கோடி டன் அரிசியும் அடங்கும்.

பருப்பு வகைகள்

மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி.தாமஸ் மாநிலங்களவையில் அண்மையில் இந்த புள்ளிவிவரங்களை சமர்ப்பித்தார். “அரிசி, கோதுமைக்கு உள்ளது போன்று, பருப்பு வகைகளை நீண்ட கால கையிருப்பு வைக்கும் எண்ணம் இல்லை. பருப்பு உற்பத்தியைப் பொறுத்தவரை நாடு கடும் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருவதே இதற்கு காரணம். உண்மையில் பருப்பு தேவைக்கும், சப்ளைக்கும் இடையிலான இடைவெளி இறக்குமதியைக் கொண்டு நிவர்த்தி செய்யப்படுகிறது” என அவர் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

## வேளாண் கடன் ரத்து ஆனதால் பயனடைந்த 2.90 கோடி விவசாயிகள்




இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

வேளாண் கடன் ரத்து செய்யப்பட்டதால் இதுவரை 2.90 கோடி விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என நாடாளுமன்ற மாநிலங்களவையில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

மத்திய பட்ஜெட்

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் சுமார் ரூ.60,000 கோடி மதிப்பிற்கான விவசாய கடன்களை தள்ளுபடி செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனால் வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய மத்திய அரசு இதுவரை ரூ.52,419.88 கோடி வழங்கியுள்ளது. கடன் ரத்து செய்யப்பட்டதால் பொதுத் துறை வங்கிகள், தனியார் வங்கிகள் மற்றும் பிராந்திய வங்கிகளில் கடன் வாங்கிய 1.04 கோடி விவசாயிகள் ஆதாயம் அடைந்துள்ளனர். மண்டல ஊரக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கிய 1.89 கோடி விவசாயிகள் பலன் அடைந்துள்ளனர்.

கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் நாடு முழுவதுமாக 3.76 கோடி ஹெக்டேருக்கும் அதிகமான விவசாய நிலங்களுக்கு காப்பீட்டு வசதி அளிக்கப்பட்டுள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில் அதிக அளவு நிலங்கள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. அடுத்தபடியாக மத்தியபிரதேசம் மற்றும் ஆந்திராவில் அதிகபட்சமாக வேளாண் நிலங்களுக்கு காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய வேளாண் அமைச்சகம் நான்கு வகையான பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தேசிய விவசாய காப்பீட்டுத் திட்டம், மேம்படுத்திய தேசிய விவசாய முன்னோடி காப்பீட்டுத் திட்டம், பருவநிலை சார்ந்த முன்னோடி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மற்றும் முன்னோடி தேங்காய் பனை காப்பீட்டுத் திட்டம் ஆகியவையே அந்த நான்கு திட்டங்களாகும்.

உச்சவரம்பு

இந்த நான்கு பயிர்க் காப்பீட்டு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் இழப்பீடுகளுக்கான தொகையில் அரசு எவ்வித உச்சவரம்பும் நிர்ணயிக்கவில்லை. மகசூல், பருவநிலை மற்றும் இந்த திட்டங்களின் பயன்பாடு ஆகிய அம்சங்களைப் பொறுத்து தேவைப்படும் தொகையை நிர்ணயிக்க முடியும். மத்திய வேளாண் துறைக்கான ராஜாங்க அமைச்சர் ஹரீஷ் ராவத் மாநிலங்களவையில் சமர்ப்பித்த தனது பதிலில் மேற்கண்ட தகவல்களை தந்துள்ளார்.